DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
CC.No.100/2018

Deposition of witness for: PW - 7

Name : **வீரணன்** Father/Husband Name : **இருளன்**

Age : Calling :

Date : 16.04.2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 16 day of 04.2026.

( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது சாம்பிராணிபட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். அசா1 வளர்மதி எனது மனைவியின் அக்கா ஆவார். சாட்சி விஜயன், அசா1 விசித்ரா எனது மதினியா பிள்ளைகள் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 02.03.2017ம் தேதி இரவு 10.30 மணிக்கு எனது மதினி வளர்மதியின் பிள்ளைகள் போன்செய்தார்கள். அவர்களது பக்கத்து வீட்டுக்காரர்களான பால்பாண்டி மணியாரம் இருவரும் வளர்மதியை இரும்பு ராடால் பால்பாண்டி பின்தலையில் அடித்ததாகவும், மணியாரம் கட்டை கம்பால் வளர்மதியின் கையில் அடித்ததாகவும், அதில் அவருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டதாக சொன்னார்கள். மேலும், விஜயனையும் எதிரிகள் அடித்ததாக சொன்னார்கள். நான் புறப்பட்டு அங்கு செல்வதற்கு முன் வளர்மதியை மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்துவிட்டார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சை மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார்கள். நான் மேலூர் அரசு மருத்துவமனையிலிருந்து வளர்மதி மற்றும் விஜயனுடன் வேலம்மாள் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு மருத்துவமனையிலிருந்து

கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மேலூர் போலீசார் அங்கு வந்தார்கள். அங்கு வளர்மதி போலீசாரிடம் புகார் கொடுத்தார். அந்த புகாரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் தற்போது காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த அறிவேன் சாட்சி கையொப்பம் அசாஆ2ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்,**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

**குறுக்குவிசாரணை செய்ய வாய்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. குறுக்குவிசாரணை இத்துடன் முடித்துவைக்கப்படுகிறது.**